செ.வெ.எண்: 08 நாள்: 04.01.2018

# பத்திரிக்கை செய்தி

வேளாண் பெருமக்கள் பூச்சிநோய் கண்காணிப்பினை சரிவர மேற்கொள்வதுடன் பயிர்பாதுகாப்பு மருந்துகளை தேவையான அளவு பயன்படுத்துவதுடன் மிகவும் பாதுகாப்பான முறையில் பயிர்களுக்கு தெளிக்குமாறு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சு. கணேஷ் அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறியதாவது,

தமிழ்நாட்டில் தற்பொழுது அனைத்து மாவட்டங்களிலும் வேளாண் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றது. நெல், மக்காச்சோளம், கரும்பு மற்றும் உளுந்து ஆகிய பயிர்கள் வளர்ச்சி பருவம் முதல் அறுவடை நிலை வரை நிற்கும் பயிர்களாக உள்ளன. அனைத்து பயிர்களிலும் பூச்சி நோய் தாக்குதலுக்கு சாதகமான சூழ்நிலை தற்பொழுது நிலவுகின்றது. நெற்பயிரில் இலைசுருட்டுப்புழு, ஆனைக்கொம்பன் ஈ, குருத்துபூச்சி ஆகிய பூச்சிகள் இலைப்புள்ளி நோய், பாக்டீரியல் இலைக்கருகல் நோய், குலைநோய், கழுத்துக்குலை நோய் தாக்குதலும் உளுந்தில் காய்ப்பழு சாறு உறிஞ்சும் பூச்சிகளும் தாக்க வாய்ப்புள்ளது.

வேளாண் பயிர்களில் பூச்சிநோய் தாக்குதல் பொருளாதார சேத நிலைக்கு (ETL) மேல் இருக்கும் பட்சத்தில் பயிர் பாதுகாப்பு மருந்துகளை தெளிக்க வேண்டும். இயன்ற வரை இயற்கை பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் பூஞ்சானக் கொல்லி மருந்துகள் (உதாரணம் டிரைக்கோடெர்மா, சூடோமோனாஸ், பிவேரியா, பேசில்லஸ், வெர்ட்டிசீலியம், பஞ்சகாவ்யா, ஜீவாமிருதம், வேப்ப எண்ணெய், வேப்பஞ்சாறு மற்றும் இயற்கை பூச்சி விரட்டிகள்) பயன்படுத்த வேண்டும்.

விளக்குப் பொறிகள் அதிக அளவில் உபயோகப்படுத்த வேண்டும். ஒரு ஏக்கருக்கு ஒன்று வீதம் வைத்து தாய் அந்தப்பூச்சிகளை அழிக்க வேண்டும். மஞ்சள் ஒட்டுப்பொறிகள் மற்றும் சூரிய ஒளி விளக்குப் பொறிகளை வைத்து தாய் அந்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். டிரைக்கோகிராமா ஒட்டுண்ணிகளை வயல்களில் விடுவிக்கச் செய்து புழுக்களை அழிக்கலாம்.

இரசாயன பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்துவதாக இருந்தால் வேளாண் / தோட்டக்கலைத்துறை அலுவலர்களின் ஆலோசனையை பெற்று அதிக வீரியமில்லா பயிர் பாதுகாப்பு மருந்துகளை பயிருக்கு தேவையான அளவு மட்டுமே கொள்முதல் செய்து அவற்றை பாதுகாப்பான முறையில் பயிர்களுக்கு தெளிக்க வேண்டும்.

**பயிர் பாதுகாப்பு மருந்துகள் தெளிக்கும்போது கடைபிடிக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பின்வருமாறு:**

**செய்யக்கூடியது (Do’s)**

1. பயிருக்கு தேவையான சரியான மருந்துகளை சரியான அளவில் பயன்படுத்த வேண்டும்.
2. பயிர் பாதுகாப்பு மருந்துகளை காலை 10 மணிக்குள்ளும் மாலை 4.00 மணிக்கு பிறகும் தெளிக்க வேண்டும்.

3. மருந்து கலக்கும் போது பரிந்துரைக்கப்பட்ட அளவு தண்ணீரை கலந்து தெளிக்க வேண்டும். கைத்தெளிப்பான் எனில் 200 லிட்டர் தண்ணீரும் விசைத்தெளிப்பான எனில் 60 லிட்டர் தண்ணீரும் கலந்து தெளிக்க வேண்டும்.
4. மருந்து தெளிப்பவர் (Spray Man) கையுறை, காலுறை, மூக்கு, வாய் கவசம் கண்டிப்பாக அணிய வேண்டும்.
5. காற்று வீசும் திசையிலேயே மருந்து தெளிக்க வேண்டும்.
6. பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பான் விதைச்தெளிப்பான மூலம் தெளிக்கும் போது அதிகபட்சம் 10 டேங்க் மட்டுமே தெளிக்க வேண்டும். கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கும் போது அதிகபட்சமாக 16 டேங்க் மட்டுமே தெளிக்க வேண்டும். அதற்கு அதிகமாக தெளிக்கும் போது உடல் நலக்குறைவு ஏற்பட்டு உயிருக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**செய்யக்கூடாதவை (Don'ts)**

1. பயிர் பாதுகாப்பு மருந்துகளை காலை 10 மணிக்கு மேலும் மாலை 4.00 மணிக்கு முன்னும் தெளிக்க கூடாது.
2. காற்று அடிக்கும் திசைக்கு எதிர் திசையில் மருந்து அடிப்பதை தவிர்க்க வேண்டும்.
3. அளவுக்கு அதிகமான மருந்துகளை பயிர்களுக்கு தெளிக்க கூடாது
4. ஒரு நாளைக்கு மருந்து தெளிப்பவர் அதிகபட்சம் 2 ஏக்கருக்கு மேல் மருந்து தெளிக்க கூடாது.
5. தரமற்ற மற்றும் தடைசெய்யப்பட்ட பூச்சிக் கொல்லி மருந்துகள் உபயோகிக்க கூடாது.

மேற்கண்ட முறைகளை பின்பற்றி பாதுகாப்பான முறையில் மருந்து தெளித்து பூச்சி நோய் தாக்குதலை கட்டுப்படுத்தி மனிதர்களின் உடல்நலம் பேணவும் பின் விளைவுகளை தவிர்க்கவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், பயிர் பாதுகாப்பு மருந்துகளான பூச்சிக்கொல்லி மற்றும் நோய் கொல்லி மருந்துகளை விற்பனை செய்யும் விற்பனையாளர்கள் பூச்சி நோய் மருந்துகள் விற்பனைக்குரிய உரிமம் வைத்திருக்க வேண்டும். உரிமம் பெற்ற விற்பனையாளர்கள் காலாவதியான பூச்சி நோய் மருந்துகள், உற்பத்தி மற்றும் விற்பனைக்கு தடை செய்யப்பட்ட பூச்சி மருந்துகள், அதிக வீரியமுள்ள விஷத்தன்மை கொண்ட பூச்சி மருந்துகள் ஆகியவற்றை விவசாயிகளுக்கு விற்பனை செய்யக் கூடாது.

விற்பனைக்கு தடை செய்யப்பட்ட பூச்சி நோய் மருந்துகள் விபரத்தை விற்பனை நிலையத்தில் விவசாயிகள் பார்வையில் படும்படி பலகையில் எழுதி வைக்க வேண்டும். பூச்சி நோய் மருந்துகள் தெளிக்கும்போது கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகளை விற்பனை நிலையத்தின் முன்புறம் எழுதி ஒட்ட வேண்டும்.

விற்பனை உரிமம் இல்லாமல் பயிர் பாதுகாப்பு மருந்துகள் விற்பனை செய்பவர்கள் காலாவதியான பூச்சி நோய் மருந்து மற்றும் மத்திய அரசினால் தடை செய்யப்பட்ட பூச்சி நோய் மருந்துகளை விற்பனை செய்பவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**